(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

Case Number	:	Spl.C.C.No.1/2022
Deposition Of Witness for	:	PW3
Name	:	**திரு.கணபதி**
Father's Name	:	திரு.வெள்ளை
Village	:	
Taluk	:	
Calling	:	
Religion	:	
Age	:	

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **16th April 2026.**

(எதிரி ஆஜர்.. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை :

1. நான் தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், சிவகங்கையில் உதவியாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 01.08.2017 முதல் 01.07.2022 வரை இளநிலை உதவியாளராக பணிபுரிந்தேன். அதன் பின் பதவி உயர்வு பெற்று தற்போது உதவியாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 12.01.2021 ம் தேதி நான் அலுவலகத்தில் இருந்தபோது

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.04.16 15:06:26 +0530

துணை மண்டல மேலாளர் திருமதி.ஆஷாம்மாய் அவர்கள் எங்களுக்கு கொடுத்த உத்தரவுபடி லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகத்திற்கு 12.01.2021 அன்று காலை 10.50 மணிக்கு சென்றேன். அப்போது லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் ஒரு நபர் நான் காவல் ஆய்வாளர் என்று என்னிடம் அறிமுகப்படுத்தினார். அவரது பெயர் திரு.சந்திரன் என்று என்னிடம் கூறினார்.

2. அலுவலகத்தில் அங்கு இருந்த ஒரு நபரிடம் பெயர், விலாசம் கேட்டுத்தெரிந்து கொண்டேன். அவர் பெயர் திரு.ஆரோன் அரவிந்த் ரெஜிஸ், துணை இயக்குநர், சுகாதார பணிகள் அலுவலகத்தில் (பொறுப்பு) பணிபுரிவதாக என்னிடம் கூறினார். காவல் ஆய்வாளர் எங்களிடம் அரசு சாட்சிகளாக இருக்க குற்ற எண்.1/2021 ன் பொறிவைப்பு நடவடிக்கைக்கு அரசு சாட்சிகளாக இருக்க சொன்னார். நானும் அதில் சம்மதித்தேன். ஆய்வாளர் எங்கள் இருவரையும் அங்கு இருந்த திரு.கருணாகரன் என்பவரை பரஸ்பர அறிமுகம் செய்து வைத்தார். கருணாகரன் கொடுத்த புகாரின் நகல், முதல் தகவல் அறிக்கையின் நகலை கொடுத்து படித்துப்பார்க்கச்சொன்னார்கள். புகாரில் உள்ள பொருண்மைகள் குறித்து தெரிந்து கொண்டோம். பின்பு அது உண்மைதானா என்று கருணாகரனிடம் கேட்டுத்தெரிந்து கொண்டோம்.

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.04.16 15:06:33 +0530

அதில் கூறப்பட்ட அனைத்தும் உண்மைதான் என்று கருணாகரன் கூறினார்.

3. என்னிடம் காண்பிக்கப்படும் முதல் தகவல் அறிக்கையின் நகலைதான் நான் படித்துப்பார்த்தேன். புகார்தாரர் திரு.கருணாகரன் என்பவர் கிராம நிர்வாக அலுவலர் திரு.கணேசமூர்த்தி அவர்கள் லஞ்சம் கேட்டதற்காக கொடுக்க விருப்பம் இல்லாமல் தானாக கொண்டு வந்த பணம் ரூ.4000/-ஐ (இரண்டு ரூ.2000/- நோட்டுக்கள்) காவல் ஆய்வாளரின் அறிவுறுத்தலின்பேரில் மற்றொரு அரசு சாட்சியான திரு.ஆரோன் அரவிந்த் ரெஜிஸ் என்பவரிடம் புகார்தாரர் கொடுத்தார். அந்த ரூபாய் நோட்டுகளின் எண்கள் 4GS 502109. 9M2 776000 ஆகும். அந்த ரூபாய் நோட்டுகளை திரு.ஆரோன் அரவிந்த் ரெஜிஸ் அவர்கள் காவல் ஆய்வாளர் அறிவுறுத்தலின்பேரில் எண்ணிப்பார்த்தார்.

4. காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன்பேரில் தலைமைக்காவலர் திரு.அருள்ராஜ் என்பவர் இரண்டு ஊடுருவி பார்க்கக்கூடிய கண்ணாடி Disposable டம்ளரில் சோடியம் கார்பனேட் கரைசல் தயார் செய்தார். காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அரசு சாட்சியான திரு.ஆரோன் அரவிந்த் ரெஜிஸ் அவர்கள் தன்னுடைய வலது மற்றும் இடது கைவிரல்களை தயார் செய்யப்பட்ட சோடியம்

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.04.16 15:06:41 +0530

கார்பனேட் கரைசலில் நனைத்தார். அந்த கரைசலில் எந்த வித மாற்றமும் ஏற்படவில்லை. அதன் பின்பு காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க தலைமை காவலர் திரு.அருள்ராஜ் அவர்கள் இரண்டு ரூ.2000/- நோட்டுக்களின் இருபுறங்களிலும் பினாப்தலீன் பவுடரை தடவி மற்றொரு அரசு தரப்பு சாட்சியான திரு.ஆரோன் அரவிந்த் ரெஜிஸ் அவர்கள் எண்ணிப்பார்த்துவிட்டு புகார்தாரர் கருணாகரன் அவர்களின் இடது புற சட்டை மேல்பாக்கெட்டில் வேறு பணமோ, பொருளோ இல்லை என்று உறுதி செய்து கொண்டு மேற்படி பணத்தை வைத்தார். திரு.ஆரோன் அரவிந்த் ரெஜிஸ் தனது வலதுகைகளை அந்த சோடியம் கார்பனேட் கரைசலில் நனைக்க காவல் ஆய்வாளர் சொன்னதன்பேரில் அந்த கரைசல் இளஞ்சிவப்பு நிறமாக மாறியது. அதே போல் தனது இடது கைவிரல்களை மற்றொரு சோடியம் கார்பனேட் கரைசலில் நனைத்தபோது அந்த கரைசல் இளஞ்சிவப்பு நிறமாக மாறியது. சோதனையின் முக்கியத்துவத்தை ஆய்வாளர் எங்களுக்கு விளக்கினார். அதன்பின்னர் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு செல்லவேண்டுமென்று அறிவுறுத்தினார். புகார்தாரரிடம் காவல் ஆய்வாளர் ஆஜர் எதிரி லஞ்சமாக பணம் கேட்டால் மட்டுமே கொடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். என்னை புகார்தாரருடன் செல்லவேண்டும் என்றும் கிராம நிர்வாக

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.04.16 15:06:49 +0530

அலுவலகத்தில் நடக்கும் நிகழ்வுகளை உன்னிப்பாக கவனிக்கும்படி கூறினார். ஆஜர் எதிரி என்னை புகார்தாரரிடம் யார் என்று கேட்டால் உறவினர் என்று கூற வேண்டும் என்று காவல் ஆய்வாளர் அறிவுறுத்தினார்.

5. கிராம நிர்வாக அலுவலகத்தினை விட்டு வெளியே வந்தவுடன் தனது வலது கை முழுக்கை சட்டையை மடக்கி சைகை காண்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். மேற்படி சோதனைக்கு பயன்படுத்தப்பட்ட கரைசல்கள் கொட்டி அழிக்கப்பட்டது. பினாப்தலீன் பவுடர் அலுவலக பீரோவில் வைக்கப்பட்டது. தலைமைக்காவலர் திரு.அருள்ராஜ் மற்றும் மற்றொரு அரசு சாட்சி ஆகியோர் தனது கைகளை கழுவிக்கொண்டனர். இந்நிகழ்வுகள் சம்பந்தமாக 12.01.2021 அன்று காவல் ஆய்வாளர் அறிவுறுத்தலின்பேரில் தலைமைக்காவலர் திரு.கண்ணன் அவர்கள் காலை 11.00 மணிக்கு ஆரம்பித்து காலை 11.30 மணி வரை ஒப்படைப்பு மகஜர் தயார்செய்தார்கள். அந்த ஒப்படைப்பு மகஜரில் நானும், மற்றொரு அரசு சாட்சி திரு.ஆரோன் அரவிந்த் ரெஜிஸ், புகார்தாரர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோர் கையொப்பம் செய்தோம். ஒப்படைப்பு மகஜரில் நான்கு பக்கங்களின் அடிப்பகுதியில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த **ஒப்படைப்பு மகஜரில் உள்ள**

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.04.16 15:06:54 +0530

எனது கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ–5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஒப்படைப்பு மகஜரில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும்.

6. அன்றே சுமார் 14.00 மணிக்கு சிவகங்கை லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திலிருந்து வாதி கருணாகரன், அரசு சாட்சிகளாகிய நாங்கள் இருவர் மற்றும் போலிஸ் பார்ட்டியினர் ஆகியோர் அரசு வாகனத்தில் கிளம்பினோம். காலை சுமார் 15.10 மணிக்கு தெற்கு இளையாங்குடி தாலுகா, கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்றோம். கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்றபோது அங்கு அலுவலகம் பூட்டப்பட்டிருந்தது. வாதி கருணாகரன் அவரது கைபேசியின் மூலம் கிராம நிர்வாக அலுவலர் திரு.கணேசமூர்த்தி அவர்களிடம் தொடர்பு கொண்டு தான் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு வந்திருப்பதாக கூறினார், அதற்கு எதிரி இளையாங்குடி–பரமக்குடி ரோட்டில் அமைந்திருக்கும் ஐயங்கார் பேக்கரிக்கு அருகில் வருமாறு கூறினார். அதன் பின்பு கருணாகரன், அரசு சாட்சிகளாகிய நாங்கள் இருவர் மற்றும் போலிஸ் பார்ட்டியினர் ஆகியோர் ஐயங்கார் பேக்கரிக்கு அருகில் சென்றோம்.

7. எங்களை இறக்கிவிட்டு விட்டு போலிஸ் பார்ட்டியினர் சிவகங்கைக்கு செல்லும் ரோட்டின் அருகில் உள்ள நிழற்குடை அருகில் மறைந்து நின்றார்கள். அப்போது ஆஜர் எதிரி திரு.கணேசமூர்த்தி அங்கு

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.04.16 15:07:01 +0530

வந்தார். நான், புகார்தாரர் கருணாகரன் மற்றும் எதிரி ஆகிய மூவரும் ஐயங்கார் பேக்கரி எதிரே உள்ள பேருந்து நிழற்குடைக்கு சென்றோம். அப்போது கருணாகரன் கிராம நிர்வாக அலுவலரான எதிரியிடம் பட்டா மாறுதல் சம்பந்தமாக கேட்டார். அதற்கு கிராம நிர்வாக அலுவலர் நான் கேட்ட பணம் ரூ.4000/– கொண்டு வந்திருக்கிறீர்களா என கேட்டார். அதன் பின்பு அந்த பணத்தை தனது சட்டைப்பையில் இருந்து எடுத்து ஆஜர் எதிரியிடம் கருணாகரன் கொடுத்தார். எதிரியும் அந்த பணத்தை அவரது வலது கையால் பெற்று அவரது இடது பக்க மேல் சட்டைப்பாக்கெட்டில் வைத்தார். அதன்பின்பு நான் தங்களுக்கு online–ல் பட்டா மாறுதல் சம்பந்தமாக சிபாரிசு செய்து அனுப்பிவிடுவதாக கூறினார். அதன்பின்பு நானும், வாதியும் அந்த நிழற்குடையை விட்டு வெளியே வந்தோம்.

8. கருணாகரன் ஆய்வாளர் ஏற்கனவே அறிவுறுத்தியபடி தனது வலது பக்க முழுக்கைசட்டையை மடித்து சைகை காண்பித்தார். அதன்பின்பு போலிஸ் பார்ட்டியினர் மற்றும் மற்றொரு அரசு சாட்சி, காவல் ஆய்வாளர் ஆகியோர்கள் எங்களிடம் வந்து நடந்த விபரங்களை கேட்டார்கள். அதன்பின்பு வாதி கருணாகரன் நிழற்குடைக்குள் எதிரி லஞ்சம் கேட்டுப் பெற்றுக் கொண்ட விபரத்தை காவல் ஆய்வாளரிடம்

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.04.16 15:07:06 +0530

கூறினார். அப்போது காவல் ஆய்வாளர் என்னிடம் கேட்டபோது நானும் நடந்த நிகழ்வுகளை கூறினேன். வாதி கருணாகரன் ஆஜர் எதிரி பயணியர் நிழற்குடைக்கு நின்றவரை அடையாளம் காட்டினார். பின்பு காவல் ஆய்வாளர் கிராம நிர்வாக அலுவலரிடம் என்னையும், மற்றொரு அரசு சாட்சியையும் அறிமுகம் செய்து வைத்தார். அப்போது கணேசமூர்த்தி, கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் பதற்றமாக காணப்பட்டார். அவரை காவல் ஆய்வாளர் ஆசுவாசப்படுத்தினார். அங்கிருந்து வாதி கருணாகரனை வெளியே செல்லும்படி காவல் ஆய்வாளர் அறிவுத்தினார். அவரும் வெளியே சென்றுவிட்டார்.

9. பயணியர் நிழற்குடையில் பொதுமக்கள் யாரும் இல்லை. இருந்தபோதும் பொதுமக்கள் வந்து செல்லும் இடம் என்பதால் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் காவல் ஆய்வாளர், போலிஸ்பார்ட்டியினர், அரசு சாட்சிகள் ஆகியோர் தெற்கு இளையான்குடி, கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்றோம். அங்கு காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன்பேரில் தலைமை காவலர் திரு.விஜயகுமார் அவர்கள் 180 மி.லி ஊடுருவி பார்க்கக்கூடிய கண்ணாடி டம்ளரில் சோடியம் கார்பனேட் கரைசல் தயார் செய்தார். கணேசமூர்த்தி தனது வலது கைவிரல்களை அந்த கரைசலில் நனைத்தார். அந்த கரைசல்

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.04.16 15:07:11 +0530

இளஞ்சிவப்பு நிறமாக மாறியது. அந்த கரைசலை கண்ணாடி பாட்டிலில் ஊற்றி, துணி சுற்றி, நூலால் கட்டி, V&AC சீல் வைத்து, வலது கைவிரல் கரைசல் "R" என லேபிள் ஒட்டினார்கள். அந்த பாட்டிலில் ஆஜர் எதிரி, நான், காவல் ஆய்வாளர் மற்றும் மற்றொரு அரசு சாட்சி ஆகிய நால்வரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் "R" என லேபிள் ஒட்டப்பட்ட கரைசல் அடங்கிய பாட்டிலில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த **"R" என லேபிள் ஒட்டப்பட்ட பாட்டில் அ.த.சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. அதன்பின்னர் காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன்பேரில் தலைமை காவலர் திரு.விஜயகுமார் அவர்கள் 180 மி.லி ஊடுருவி பார்க்கக்கூடிய மற்றொரு கண்ணாடி டம்ளரில் சோடியம் கார்பனேட் கரைசல் தயார் செய்தார். கணேசமூர்த்தி தனது இடது கைவிரல்களை அந்த கரைசலில் நனைத்தார். அந்த கரைசல் எந்த நிறமாற்றமும் அடைந்ததாக கண்ணுக்கு புலப்படவில்லை. அந்த கரைசலை கண்ணாடி பாட்டிலில் ஊற்றி, துணி சுற்றி, நூலால் கட்டி, V&AC சீல் வைத்து, வலது கைவிரல் கரைசல் "L" என லேபிள் ஒட்டினார்கள். அந்த பாட்டிலில் ஆஜர் எதிரி, நான், காவல் ஆய்வாளர் மற்றும் மற்றொரு அரசு சாட்சி ஆகிய நால்வரும் கையொப்பம் செய்தோம். என்னிடம்

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.04.16 15:07:18 +0530

காண்பிக்கப்படும் "L" என லேபிள் ஒட்டப்பட்ட கரைசல் அடங்கிய பாட்டிலில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த **"L" என லேபிள் ஒட்டப்பட்ட பாட்டில் அ.த.சா.பொ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. காவல் ஆய்வாளர் வாதி கருணாகரனிடம் எதிரி வாங்கிய பணம் எங்கே என்று கேட்டார். அதற்கு எதிரி அவர் அணிந்திருந்த வெளிர் பச்சை நிற சட்டையின் இடது பக்க பாக்கெட்டிலிருந்து எடுத்து கொடுத்தார். அந்த பணத்தை மற்றொரு அரசு சாட்சியான திரு.ஆரோன் அரவிந்த் ரெஜிஸ் அவர்கள் எண்ணிப்பார்த்தார். இரண்டு ரூ.2000/- நோட்டுக்கள் மொத்தம் ரூ.4000/- இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களின் எண்களை லஞ்ச ஒழிப்பு துறை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஒப்படைப்பு மகஜரில் இருந்த எண்களுடன் ஒப்பீடு செய்து பார்த்ததில் அவ்வெண்களுடன் ஒத்திருந்தது. காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன்பேரில் எதிரிக்கு மாற்று உடை கொடுத்து அவர் அணிந்திருந்த வெளிர் பச்சை நிற சட்டையின் இடது பக்க பாக்கெட்டை தலைமைக்காவலர் தயார் செய்த சோடியம் கார்பனேட் கரைசலில் நனைத்தார். அந்த கரைசல் இளஞ்சிவப்பு நிறமாக மாறியது. அந்த கரைசலை கண்ணாடி பாட்டிலில் ஊற்றி, துணி சுற்றி, நூலால் கட்டி, V&AC சீல் வைத்து, சட்டையின் இடது பக்க பாக்கெட் நனைத்த கரைசல் "P" என

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.04.16 15:07:24 +0530

லேபிள் ஒட்டினார்கள். அந்த பாட்டிலில் ஆஜர் எதிரி, நான், காவல் ஆய்வாளர் மற்றும் மற்றொரு அரசு சாட்சி ஆகிய நால்வரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் "P" என லேபிள் ஒட்டப்பட்ட கரைசல் அடங்கிய பாட்டிலில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த **"P" என லேபிள் ஒட்டப்பட்ட பாட்டில் அ.த.சா.பொ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **எதிரி அணிந்திருந்த வெளிர் பச்சை நிற முழுக்கை சட்டை அ.த.சா.பொ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12. எதிரி காவல் ஆய்வாளரிடம் ரூ.4000/- எடுத்த கொடுத்தபோது எதிரியின் சட்டைப்பையில் வேறு எந்த பணமும் இல்லை. 17.45 மணிக்கு கைது நடவடிக்கையின் விபரங்களை எதிரியிடம் தெரிவித்து எதிரியை கைது செய்தார்கள். காவல் ஆய்வாளர் அவர்கள் இளையாங்குடி வட்டாட்சியர் திரு.ரமேஷ் அவர்களுக்கு காவல் ஆய்வாளர் தெரிவித்ததன் அடிப்படையில் அங்கு வந்தார். அவரிடம் மேற்படி நிகழ்வுகளை தெரிவித்து சாட்சியாக இருக்கும்படி காவல் ஆய்வாளர் கூறினார். வட்டாட்சியர் அவர்களும் ஒப்புக்கொண்டு நடந்த நிகழ்வுகளை பார்த்துக்கொண்டிருந்தார். கிராம நிர்வாக அலுவலகத்தில் காவல் ஆய்வாளர் புகார்தாரரின் பட்டா மாறுதல் சம்மந்தமான ஆவணங்களை

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.04.16 15:07:31 +0530

கேட்டார். அப்போது எதிரி அவரது கப்போர்டில் இருந்து வாதி தொடர்பான மொத்தம் 11 ஆவணங்களை எடுத்த கொடுத்தார். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புகை சீட்டு 04.01.2021–ம் தேதியிட்ட ஆவணத்தினை எதிரி காவல் ஆய்வாளருக்கு எடுத்து ஆஜர் செய்தததுதான். அதில் நானும், மற்றொரு அரசு சாட்சி, காவல் ஆய்வாளர் மற்றும் எதிரி ஆகியோர் கையொப்பம் செய்தோம். இதேபோல் எதிரி எடுத்து ஆஜர் செய்த மற்ற அனைத்து ஆவணங்களிலும் நானும், மற்றொரு அரசு சாட்சி, எதிரி, காவல் ஆய்வாளர் ஆகியோர் கையொப்பம் செய்தோம். மேற்படி **எதிரியின் அலுவலகத்தில் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட 11 ஆவணங்கள் உள்ளங்கிய கோப்பு அ.த.சா.ஆ–6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர் எதிரி காவல் ஆய்வாளரிம் தான் கருணாகரனிடம் எந்த பணமும் கேட்கவில்லை என்றும் அவராகத்தான் வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி கொடுத்ததாகவும் கூறினார்.

13. அதன்பின்னர் காவல் ஆய்வாளர் பொறிவைப்பு நடவடிக்கை நிகழ்வை கைப்பற்றுதல் மகஜராக முதல் நிலை காவலர் கண்ணன் என்பவர் மூலம் மடிக்கணினி மூலம் தட்டச்சு செய்தார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர் மொத்தம் 6 பக்கங்கள் கொண்டது. அதில் அரசு சாட்சிகளாகிய நாங்கள் இருவர், காவல் ஆய்வாளர், வட்டாட்சியர்

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.04.16 15:07:36 +0530

திரு.ரமேஷ் மற்றும் எதிரி ஆகியோரும் கையொப்பம் செய்தோம். கைப்பற்றுதல் மகஜரில் பதிவு செய்யப்பட்ட விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அந்த **கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

14. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். காவல் ஆய்வாளர், நானும், மற்றொரு அரசு சாட்சி ஆகியோர் கையொப்பம் செய்தோம். அந்த **பார்வை மகஜர் அ.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு ஆஜர் எதிரியின் வீட்டிற்கு காவல் ஆய்வாளருடன், எதிரியுடன், அரசு சாட்சிகளாகிய நாங்கள் இருவரும் மானாமதுரை, கிருஷ்ணராஜபுரம் காலனியில் உள்ள கதவு எண்.335 வீட்டிற்கு சென்றோம். எதிரியின் வீட்டில் அவரது தம்பி பாலமுருகன் என்பவர் இருந்தார். எதிரியின் வீட்டை சோதனை செய்து சோதனை ஜாபிதா தயார் செய்யப்பட்டது. அங்கு எந்த ஆவணமோ, பொருளோ கைப்பற்றப்படவில்லை. அந்த சோதனை ஜாபிதாவில் நானும், மற்றொரு அரசு சாட்சியும், எதிரியின் தம்பி பாலமுருகன் என்பவரும் கையொப்பம் செய்தோம். சோதனை ஜாபிதாவின் நகல் ஒன்று அவருக்கு வழங்கப்பட்டது. மேற்படி **சோதனை ஜாபிதா அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு அரசு சாட்சிகளாகிய நாங்கள் இருவர், எதிரி,

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.04.16 15:07:43 +0530

காவல் ஆய்வாளர் ஆகியோர் சிவகங்கை, ஊ.த.க பிரிவு காவல் நிலையத்திற்கு சுமார் 22.00 மணிக்கு வந்தோம். அதன்பின்னர் காவல் ஆய்வாளர் சொன்னதன்பேரில் நான் எனது வீட்டிற்கு சென்று விட்டேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

(கு.வி.மு.ச. பிரிவு 242(3)–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.04.16 15:07:51 +0530

Special Judge,
P.C.ACT Cases,
Sivagangai.